# இராஜ்யங்களின் அதிகாரங்களை அபகரிக்க சூழ்ச்சி


REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆவணி 28௳ திங்கள் (13—9—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆவணி 29௳ செவ்வாய் (14—9—54) | இதழ்: 78


## மக்கள் சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

கூட்டாட்சி என்பது கேலிக்கூத்தாகிறது!

எல்லா அதிகாரங்களும் டில்லியிடம் குவிகிறதே!

## மூன்றாவது அரசியல் சட்ட திருத்த மசோதாமீது விவாதம்

பல இராஜ்யங்கள் மசோதாவை எதிர்க்கின்றன

இந்திய அரசியல் சட்டம், இந்திய உப கண்டத்தில், கூட்டாட்சி நடத்த வகை செய்திருக்கிறது என்று கூறப்படுகிறது; ஆனால், உண்மையில், டில்லியிலே இருக்கிற மத்திய சர்க்கார் வலிவு பெற்ற சர்க்கார் ஆகவும், இராஜ்யங்களிலே ஆட்சி நடத்துகிற சர்க்கார், டில்லி சர்க்காரின் அதிகாரத்திற்கு அடங்கி நடக்கும் சர்க்கார்களாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை மக்கள் கண்டு உணர்ந்திருக்கின்றனர்.

இராஜ்ய சர்க்கார்களுக்குப் போதுமான அதிகாரங்களைக் கொடுக்காமல், வரி வசூலிப்பது, பாதுகாப்பு, வாணிபம் ஆகிய எல்லாத் துறைகளிலும், டில்லி சர்க்கார் தன்னிடமே எல்லா அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு, அதனால் கிடைக்கிற வருமானம் அனைத்தையும் கொண்டு செல்கிறது.

கூட்டாட்சி அமைப்பு என்பதின் விதி முறைகளை இந்திய அரசியல் அமைப்பு மதித்திருப்பதாகக் காணோம்.

அதுமட்டுமின்றி, இராஜ்ய சர்க்கார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு சில அதிகாரங்களையும் அவைகளிடமிருந்து அபகரித்து தன்னிடமே வைத்திருக்க, டில்லி அடிக்கடி ஆவன செய்துவருகிறது.

மாதந்தோறும் திருத்தப்படுகின்ற இந்திய அரசியல் அமைப்புத் திருத்தங்களில், பெருவாரியானவை, இந்த நோக்குடனேயே காணப்படுகின்றன.

அண்மையில் இந்திய மக்கள் சபையில், வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இந்திய அரசியல் அமைப்பிலுள்ள பொருள்கள் பற்றிய பொதும் பட்டியலின் 33-வது பிரிவுக்கு திருத்தம் ஒன்றைப் பிரேரேபித்து, (மூன்றாவது அரசியல் சட்ட திருத்த மசோதா) அதை பண்டித நேரு, நேர்வாய் ஆகியோர் அடங்கிய தனிக் கமிட்டி ஒன்றின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்று கோரியிருக்கிறார்.

இத்திருத்தத்தின் மூலம், நாட்டின் சில அத்தியாவசியமான பொருள்களின் அதிகாரம் மத்திய சர்க்காரிடம் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று கோரப்படுகிறது.

தற்போது, இந்தப் பொருள்களின்மீது, மத்திய—இராஜ்ய சர்க்கார்கள் அனைத்துக்கும், அதிகாரம் இருந்து வருகிறது.

இந்த மசோதாவின் மூலம், இராஜ்ய சர்க்கார்களுக்கு இப்பொருள்கள் மீதுள்ள அதிகாரத்தைப் பறித்துக்கொண்டு, மத்திய சர்க்கார்

(4-ம் பக்கம் பார்க்க)

# பள்ளிகளில் மத போதனை கூடாது!

## பர்மிய சர்க்கார் உத்தரவு

### புத்த பிட்சுக்களின் ஆட்சேபணையின் விளைவு

ரங்கூன், செப். 13—

பர்மாவில் உள்ள பள்ளிகள் அனைத்திலும் எந்தவிதமான மதக் கல்வியும் போதிக்கக்கூடாது என்று பர்மிய சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, புத்த பிட்சுக்களின் கோரிக்கையேரில் பள்ளிகளில் புத்த மதக் கல்வியை அளிக்க உத்திரவிட்டார்களாம்!

பின்னர், சர்க்காரின்கீழ் உள்ள எல்லா மக்களிடமும் நடுநிலையாக—சமத்துவமாக நடந்துகொள்வதுதான் நீதி என்பதை உணர்ந்துகொண்ட பர்மிய சர்க்கார், எல்லா சர்க்கார் பள்ளிகளிலும், புத்த மதத்தைப் போதிப்பது போன்று மற்ற மதங்களையும் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டுமென்று உத்திரவிட்டார்களாம்!

இதன்மூலம் பௌத்த மாணவர்கள் புத்த மதத்தைக் கற்கவும், இதர மாணவர்கள் தங்கள் மதங்களைப் பற்றி அறிந்துகொள்ளவும் வாய்ப்பளித்திருக்கின்றனர்.

ஆனால், சமீபத்தில் பர்மாவின் புத்த பிட்சுக்கள் இதைக் கடுமையாக எதிர்த்து இஸ்லாமியக் கொள்கையை மாணவர்களுக்குப் போதிப்பதை ஆட்சேபித்து, இதை உடனே ரத்து செய்ய வேண்டுமென்று கோரினார்களாம்.

இந்தப் பிரச்சினை பெரியதாக உருவெடுத்ததால் சர்க்காரின் அடிப்படைக்கே ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சிய பர்மிய சர்க்கார், சர்க்கார் பள்ளிகளில் எந்த மதக் கல்வியையும் போதிக்கக் கூடாது என்று உத்திரவிட்டிருக்கின்றனர்.

இச்செய்தியை, பர்மியப் பிரதமர் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

'மற்ற மத போதனை கூடாது,' என்று ஆட்சேபிப்பதை புத்த பிட்சுக்கள் என்று கைவிடுகின்றனரோ, அன்று இந்த உத்திரவை மீண்டும், சர்க்கார் பரிசீலிக்கும்" என்று பர்மியப் பிரதமர் கூறினார்.

## ஆப்பிரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம்!

கேப்டவுன், செப். 11—

வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்த மாதிரியில், தென் ஆப்பிரிக்கப் பிரதேசத்திற்கு ஒரு கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் 'சாட்டோ' என்ற பெயரில் உருவாக்க முயற்சி நடப்பதாக டிரான்ஸ்வால் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளதாம்.

ஆப்பிரிக்காவில் கம்யூனிசம் வளராமல் தடுப்பதே இதன் நோக்கமாம்.

தென் ஆப்பிரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், போர்ச்சுகல், பெல்ஜியம் ஆகிய சர்க்கார்களிடம் உள்ள பிரதேசங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படக்கூடும் என்றும் தெரிய வருகிறது.

## இறக்குமதி வரி அதிகரிப்பு

### வருமானத்தை அதிகரிக்க இந்திய சர்க்கார் முயற்சி

புதுடில்லி, செப். 12—

அன்னியப் பொருள்கள் பலவற்றின்மீது விதிக்கப்பட்டுவரும் இறக்குமதி வரியை இந்திய அரசாங்கம் அதிகரித்துள்ளது.

ஏலக்காய், கிராம்பு, மிளகு, இலவங்கப்பட்டை முதலிய வாசனைத் திரவியங்கள்; காய்கறிப் பண்டங்கள், ஊறுகாய்கள்—சட்னி வகையறாக்கள் (அவை டின்னிலோ, புட்டியிலோ அடைக்கப்பட்டிருந்தாலும்), இன்னும் அலங்காரப் பொருள்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பாதுகாப்பு

### மாற்று யோசனை

ஸ்டிராஸ்பர்க், செப். 12—

ஐரோப்பிய இராணுவத் திட்ட ஒப்பந்தத்தை (இ. டி. சி) பிரெஞ்சு மக்கள் சபை உறுதி செய்யாததால், மாற்று யோசனைகளைப் பரிசீலிக்க, ஐரோப்பியக் கவுன்சில் ஆலோசனை சபை இன்று கூடுகிறது!

## "இராமாயண" நாடகம்

### தடை நீக்கம்!

சென்னை, செப். 12—

தோழர் எம். ஆர். இராதா அவர்கள் நடித்துவந்த 'இராமாயண' நாடகத்திற்கு சென்னை சர்க்கார் விதித்திருந்த தடையை நீக்கிவிட்டனர் என்று தெரிகிறது.

இச்செய்தியை சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தோழர் இராதா கூறினார்.

# சோவியத்தின் தாராள நிபந்தனைகள்!

## எஃகுத் தொழிற்சாலையை தானே மூலதனமிட்டு அமைக்கும்!

### இலாபத்தில் பங்கில்லை; குறைந்த வட்டியே கேட்கப்படுகிறதாம்

புதுடில்லி, செப். 12—

வடநாட்டில் அமைக்கப்பட இருக்கும் மிகப் பெரியதோர் எஃகுத் தொழிற்சாலையை அமைக்க சோவியத் சர்க்கார் மிகவும் தாராளமான முறையில் உதவ முன்வந்திருக்கிறார்களாம்!

இந்தத் திட்டத்திற்கான சர்வே செலவுகள் அனைத்தையும், தொழில் நுணுக்க உதவிக் குழுவின் செலவையும் ரஷ்யா ஏற்குமாம்.

தொழிற்சாலையை ரஷ்ய சர்க்கார் தானே மூலதனம் இட்டுக் கட்டிப் பின்னர் அப்பணத்தை பத்து அல்லது பதினைந்து தவணைகளில் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாம்.

மூலதனமாகப் போடும் பணத்திற்கு 2 அல்லது 2½ சத விகித வட்டிதான் கேட்கப்படும் என்று தெரிகிறது. இது உலக பாங்கியின் வட்டி விகிதத்தைவிடக் குறைவாகும்.

இத்தொழிற்சாலையின் ரஷ்யா தனக்கென மூலதனத்தின் பங்கோ, அல்லது லாபத்தின் பங்கோ, முன்பு கோரவில்லை என்று தெரிகிறது.

இத்தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகள் இந்தியாவில் கிடைக்காவிட்டால், அல்லது இந்தியாவிலேயே செய்ய இயலாவிட்டால்தான் அவைகளை ரஷ்யாவிலிருந்து கொண்டுவரும் என்றும் தெரிகிறது.

இந்திய சர்க்கார் இந்தத் தொழிற்சாலைக்கு ஆகும் செலவை தனது இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் பகிர்ந்து கொண்டு திருப்பிக்கொடுக்கும் நிலை ஏற்படலாமாம்.

சோவியத்தின் இந்தப் பிரேரணைகளை இந்தியா நன்கு பரிசீலனை செய்து பின்னர் தனது முடிவைத் தெரிவிக்கும் என்று தெரிகிறது.

## வட நாட்டு விவசாயிகள்

### உரம் கடனாகப் பெறுவர்

புதுடில்லி, செப். 12—

இந்திய நாட்டில் கரும்பு உற்பத்தியைப் பெருக்கும் உத்தேசத்துடன் இந்திய அரசாங்கம் ஆரம்பித்துள்ள ஒரு இயக்கத்தின் ஒரு பகுதியாக பஞ்சாப், உத்திரப் பிரதேசம், பீகார் ஆகிய ராஜ்யங்களில் கரும்பு பயிரிடப்படுகிற 2,20,000 ஏக்கர் நிலத்திற்கு, கரும்பு உற்பத்தியாளர்களிடம், ரசாயன உரங்களைக் கடனாகக் கொடுத்து அறுவடைக் காலத்தில், உரத்தின் விலையை வசூலித்துக் கொள்ளும் ஏற்பாடு ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறது.

இந்தியா முழுமைக்குமான விரிவான ஒரு திட்டம் நிபுணர் குழு ஒன்றினால் இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. இத்திட்டம் அடுத்த ஆண்டு அமுலுக்கு வருமெனவும் தெரிகிறது.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 13—9—54 திங்கள்


# அவர்கள் பார்வைக்கு!

"சுதந்திரம் வந்த பிறகு, பல பெரிய நீர்த்தேக்க திட்டங்கள் அவசரம் அவசரமாக நிறைவேற்றப்பட்டன; இவைகளில் கிடைத்த அனுபவம் ஏராளமான பொருட்செலவு, தாமதம், பணவிரயம், இவைகள்தான் என்று கூறுவேன்;

"அந்தப் பெரிய திட்டங்கள் பிரம்மாண்டமானவை...... ஆனால், ஒவ்வொன்றிலும் திட்டங்களைப் பற்றி சரியான முறையில் ஆராயாமல் வேலைகளைத் துவங்கி விட்டோம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; இனிமேல், நன்முக ஆராயாமல், இதுபோன்ற திட்டங்கள் ஆரம்பிக்கடாது என்பேன்!'

மூடிசூடா மன்னர் என்று காங்கிரஸ் தோழர்களால் பெருமையாக அழைக்கப்படும் பண்டித நேரு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் பேசியபோது கூறிய வாசகங்கள் இவை!

தனது ஆட்சி தீட்டிய திட்டங்களின் பெருமை பற்றி அவர் தருகிற மதிப்புரை!

பொதுமக்களின் பணம் பாழாகி இருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறார்!

ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்போரிடையே காணக்கூடாத அவசரம், தாமதம், வீண்செலவு ஆகியவை தனது ஏழாண்டு ஆட்சியில் சாதாரணமாகக் காணப்படுகிறது என்று செப்புகிறார்!

ஏற்பட்ட தவறுகளை ஒப்புக் கொள்கிறாரா, அல்லது, தனது ஆட்சி 'உதவாக்கரையானது' என்று நிர்ணயிக்கிறாரா என்பது, சிந்திக்க வேண்டியதொன்றாகும்!

★

"சில காலமாகவே என்னுடைய சேவைகள், தற்போதைய அமைப்பின் மூலம், தொழிலாளர்களுக்கோ, நாட்டிற்கோ நன்மை பயக்கும் தன்மையுடையது அல்ல என்பதை நான் உணர்ந்து வருகிறேன்; ஒவ்வொருவரும் தங்களுக்கென தனித்தனியானதோர் தொழில்கொள்கையைக் கடைப்பிடிக்க விரும்புகின்றனர்; தொழில் கொள்கையில் சர்க்கார் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென எண்ணினேன்; ஆனால், இந்த நிலை வருமென்பதற்கான நம்பிக்கை எங்கோ வெகு தூரத்தில் காணப்படுகிறது."

இரண்டரை ஆண்டுகள் இந்திய சர்க்காரின் பதவி வகித்து அண்மையில் இராஜினாமா செய்துவிட்டு வெளியேறிய வி. வி. கிரி அவர்கள், தமது இராஜினாமாக் கடிதத்தில் மனம் நொந்து எழுதியிருக்கும் வாக்கியங்கள் இவை!

காங்கிரஸ் சர்க்காரிலே, தான் வகித்துவந்த பதவி, 'பயனற்றது; மக்களுக்கு நன்மை செய்யாதது,' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்!

அதைவிட அவர் முக்கியமாகக் குறிப்பிட்டிருப்பது மற்றொன்றுமுண்டு; இந்திய மந்திரிசபையிலுள்ள அமைச்சர்கள் அனைவரும், தனித்தனியான கொள்கைகளைக் கடைப்பிடிக்க முயல்கின்றனராம்!

தொழிலாளர் பிரச்சினையைப்பற்றி, சர்க்கார், மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க முடியவில்லை என்பது கிரி அவர்களின் கருத்து; 'மந்திரி சபையிலே கட்டுக்கோப்பில்லை — உண்டாக்கவும் முடியவில்லை,' என்பதுதான், அவரது இராஜினாமா கூறுகிற கருத்து!

பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமைக்கப்பட்ட மந்திரிசபையிலே பதவி வகித்த கிரி அவர்கள், மந்திரிசபையில், தொழில் பிரச்சினைக்கு நல்லதோர் பரிகாரம் காண இரண்டரை ஆண்டுகள் முயன்றிருக்கிறார்; பலன் கிட்டவில்லை; 'அதற்கான நம்பிக்கை வெகு தூரத்திலிருக்கிறது,' என்று கூறும் நிலை, அவருக்கு ஏற்பட்டுவிட்டது!

★

"காலப்போக்கில், செல்வாக்கற்றுப் போன—தேவையற்ற பழைய அஸ்திவாரத்தின் மீது, அவர்கள், நவ இந்தியாவின் சமுதாயத்தை அமைக்கிறார்கள்... ...சுதந்திரம் கிடைத்து ஏழாண்டுகள் சென்ற பிறகும், நம்மால், ஒரே திட்டமான லட்சியத்தை உருவாக்க முடியவில்லை; சமுதாயப் பிரச்சினை பற்றிய அடிப்படையான விஷயங்களை அறிந்துகொள்ள முடியவில்லை; காங்கிரசாரிடையே காணப்படும் கருத்து வேற்றுமைகள், மக்கள் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணும் நிலையில் இருக்கிறது"

உத்திரப் பிரதேச மேல் சபையைச் சேர்ந்த காங்கிரஸ் தோழர் கோவிந்த் சகாய் என்பவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள் இவை!

"மத்திய சர்க்கார் அமைச்சர்கள், இராஜ்ய முதல் அமைச்சர்கள் போக்குகளில் ஒருமைப்பாடு இல்லை; ஒரே பிரச்சினை பற்றி, காங்கிரஸ் அமைச்சர்களிடையே காணப்படும் கருத்து வேற்றுமை, மக்கள் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறது,' என்கிறார்!

★

மேலே கொடுக்கப்பட்டிருக்கிற மூன்று பேர்களுடைய கருத்துக்கள் அனைத்தும்—காங்கிரஸ் ஆட்சியிலே திறமையில்லை; திட்டவட்டமான கொள்கையில்லை - என்பதைத்தான் குறிப்பிடுகிறது!

யாரோ உதவாக்கரைகள் கூறுவது, வேண்டுமென்றே சுமத்தப்படுகிற குற்றச்சாட்டு, உலகப் போக்கை—ஆட்சிப் பொறுப்பின் சிக்கல்களை உணராதவர்கள், அவசரத்தில் கூறிய கருத்து—என்று இவைகளை ஒதுக்கிவிட முடியாது!

விளக்கம் தந்த மூவரும், அரசியல் துறையில் முக்கியமானவர்கள்; அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை அலட்சியப்படுத்திவிடலாம் என்று நினைப்பதற்கு இடமேயில்லை; அதைவிட முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, அவர்கள் மூவரும் காங்கிரஸ்காரர்கள்—காந்தியாரின் பக்தர்கள்!

பண்டித நேரு, அடிக்கடி காந்தியாரின் பெருமை பற்றிப் பேசுகிறார்!

கிரி அவர்கள் தனது இராஜினாமாக் கடிதத்தில் கூட காந்தியாரின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்!

கோவிந்த சகாய், தனது கடிதத்தில், 'காங்கிரசார் காந்திய முறைக்கு விரோதமாக நடக்கிறார்கள்,' என்று கூறியிருக்கிறார்!

★

இவர்களுடைய கருத்துக்கு ஆதாரம் காட்டுவதுபோல், மக்கள் சபையில் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கும் இந்திய சர்க்காரின் 1952-ம் ஆண்டு தணிக்கை அறிக்கையின் இரண்டாவது பகுதி காணப்படுகிறது.

"காங்கிரஸ் ஆட்சியினர், இந்தியாவுக்கென்று தயாரிக்கும் வரவு-செலவுத் திட்டங்களின், தரக் குறைவு காணப்படுகிறது; செலவினங்களின் மீது போதிய கண்காணிப்பில்லை," என்று அந்த அறிக்கை கூறுகிறது.

வெளிநாட்டிலுள்ள இந்தியத் தூதுவராலயம் ஒன்றில், அறுபதுக்கும் குறைவானவர்கள் ஊழியம் செய்கிறார்களாம்; அவர்களின் நன்மைக்காக சிற்றுண்டிச்சாலை ஒன்று பதினெட்டு மாதங்கள் நடத்தி, ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய்களைப் பாழ்படுத்தினார்கள் — என்று அந்த அறிக்கை கூறி, 'இந்தச் செலவு அனாவசியமானது,' என்று குறிப்பிட்டிருக்கிறது.

நேப்பாள அரிசியை வாங்குவதில், நேரு சர்க்கார், 1945—46-ல், முப்பத்தாறு இலட்சத்து அறுபத்து ஆறாயிரம் ரூபாய்கள் நஷ்டமடைந்தார்களாம்;

முன்பெல்லாம், 'ஆஸ்திரேலியாவிலிருந்து கோதுமை பல வந்தது; ஆகவே, நாசமாகிவிட்டது; நஷ்டம் ஏற்பட்டது,'—என்று கூறினார்கள்!

இப்போது, நேப்பாள அரிசியை வாங்கியதில் 36 இலட்சம் ரூபாய் நஷ்டமாகிறது என்று கணக்கு கிடைக்கிறது!

"நாட்டு மக்களின் வரிப்பணம், இவ்வாறு நாசமாகுவதற்கு யார் காரணம் என்பதைக் கண்டறிய முடியவில்லை," என்று தணிக்கை அறிக்கை கூறுகிறது.

காங்கிரஸ் ஆட்சியின் போக்கு பற்றி புரிந்துகொள்ளக் கிடைத்திருக்கும் சான்றுகள்—மறுக்க முடியாத ஆதாரங்கள்—இவைகளாகும்!

சத்தியம் வேண்டுமென்று கூறுவோர், காங்கிரஸ் ஆட்சியின் பெருமை பற்றிப் பேசுவோர், இவ்வித ஆதாரங்களை எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்!

காங்கிரஸ் ஆட்சியின் குறைபாடுகளையும், அத்துடன், அது, தென்னவர் மீது காட்டுகிற மாற்றாந்தாய் மனப்பான்மையையும் நாம் அடிக்கடி எடுத்துக் கூறிவந்திருக்கிறோம்.

தனி நாடு வேண்டும்—திராவிட நாடு பிரிந்தால் தான், இக்குறைபாடுகள் ஏதுமில்லாத நல்லதோர் ஆட்சியை, மக்களுக்காகக் கவலைப்படுகிற ஆட்சியை அமைக்க இயலும் என்றும் கூறி வந்திருக்கிறோம்.

நமது கருத்துக்களைக் கேட்டு நம்மீது குற்றம் சுமத்துவோர் பலர் இருக்கிறார்கள் என்பதையும் நாமறிவோம்!

காங்கிரஸ் ஆட்சியின் திறமைக் குறைவைத் தெரிந்த பின்னரும், அவர்கள் ஆட்சி பத்து ஆண்டுகள் நீடிக்க வேண்டுமென்று கூறுவோரும், இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு அவர்களே ஆளுவதுதான் சரி என்று பேசுவோரும் இருக்கிறார்கள்; அவர்களின் பார்வைக்கு காங்கிரஸ் ஆட்சியின் திறமைக் குறைவை எடுத்துக் காட்டும் புள்ளி விவரங்களை வைக்கிறோம்; இந்தப் போக்கு இன்னும் நீடிக்க வேண்டுமா என்று அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்கிறோம்.

ஏழரை ஆண்டுகளிலே காங்கிரஸ் ஆட்சியினர் சாதித்தது என்ன? படியுங்கள்—பண்டிதரே தருகிறார் பதில்! அவசரப்படாமல் படியுங்கள்—பின்னர் கூறுங்கள்—திராவிட நாடு திராவிட[illegible]!

## வடநாட்டில் எஃகு தொழிற்சாலை

### சோவியத் தொழில் நுணுக்க உதவியுடன் ஆரம்பிக்கப்படும்

புதுடில்லி, செப். 10—

**இந்த ஆண்டு இறுதிக்குள் சோவியத் ரஷ்யாவிலிருந்து தொழில் நுணுக்கக் குழு ஒன்று இந்தியாவிற்கு வந்து, இந்தியாவில் இரும்பு, எஃகுத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்க இந்திய சர்க்காருக்கு உதவும் என்று தெரிகிறது.**

சோவியத் சர்க்காரின் இந்த உதவியை ஏற்றுக் கொள்ள இந்திய சர்க்கார் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

முதலில், தொழில் நுணுக்கக் குழு ஒன்று இந்தியா வந்து தொழிற்சாலை ஆரம்பிக்கத் தகுதியான இடத்தை சர்வே செய்து, திட்டம் தயாரிக்குமென்றும், பின்னர் இந்திய சர்க்கார் அத்திட்டத்தைப் பரிசிலனை செய்து, தொழிற்சாலையை ஆரம்பிக்குமென்றும் தெரிகிறது.

ஒரிசாவில் ரூர்கலா தொழிற்சாலையை ஆரம்பிக்கவும், அல்லது மத்தியப் பிரதேசத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கவும் ஆராய்ச்சிகள் நடைபெறும் என்று தெரிகிறது.

சோவியத்தின் தொழில் நுணுக்க உதவியுடன் ஆரம்பிக்க இருக்கும் இந்த எஃகுத் தொழிற்சாலை இந்திய உபகண்டத்திலேயே இரண்டாவது பெரிய எஃகு தயாரிப்பு நிலையமாக இருக்குமென்று தெரிகிறது.

## இருதார மணம் கூடாது!

### சர்க்கார் ஊழியர் விதிகளில் திருத்தம்

### முன் அனுமதி பெற நிபந்தனை

புதுடில்லி, செப். 10— சர்க்கார் ஊழியர்கள் ஏற்கனவே ஒரு மனைவி இருக்கும்போது, சர்க்காரின் முன் அனுமதியின்றி மற்றொரு மணம் செய்து கொள்ளக் கூடாது என்று தடை செய்யப்பட்டிருக்கின்றனர்.

அகில இந்திய சர்க்கார் [illegible]களுக்கான திருத்தப்பட்ட நடத்தை விதிகளில் இந்த விதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் ஊழியர்கள், உத்தியோக சம்பந்தமான தங்கள் செயல், ஒழுக்கம் இவற்றை நிரூபிக்க அரசாங்கத்திடம் முன் கூட்டியே அனுமதி பெறுமல் கோர்ட்டுக்குப் போகவோ, பத்திரிகைகளில் எழுதவோ கூடாது என்றும் மற்றொரு விதி கூறுகிறது.

ஆனால், அவர்கள் சொந்த வாழ்க்கை சம்பந்தப்பட்ட நடத்தையையும், செயல்களையும் கோர்ட்டுகளில் நிரூபிக்க இந்த விதி தடையாயிருக்காது.

'இந்திய நிர்வாக சர்வீஸ்' (ஐ.ஏ.எஸ்) நியமன விதிகளிலும் பலதாரத் தடை சம்பந்தமான ஒரு விதி சேர்க்கப்பட்டுள்ளது.

அந்த உத்தியோகஸ்தர்களுக்கு மணமான பெண்களை நியமிப்பது பற்றியும் ஒரு விதி சேர்க்கப்பட்டுள்ளது.

மணமான பெண்கள், இந்த உத்தியோகங்களில் நியமிக்கப்பட உரிமை கொண்டாட முடியாது என்பதும் விதியில் சொல்லப்பட்டுள்ளது.

உத்தியோகத்திற்கு வந்த பின் ஒரு பெண் விவாகம் செய்து கொண்டால், அரசாங்க வேலை திறம்பட நடப்பதற்கு, அப்பெண் வேலையை ராஜிநாமாச் செய்வது அவசியம் என சர்க்கார் கருதுவார்களானால், அவ்விதமே ராஜிநாமாச் செய்யும்படி அப்பெண் உத்தியோகஸ்தரை சர்க்கார் கோரலாம் என்றும் அந்த விதி கூறுகிறது.

## அதிகாரிகளின் செல்வ நிலை

### ஆண்டுதோறும் அறிக்கை தர வேண்டும்

புதுடில்லி, செப். 10—

சர்க்கார் சிப்பந்திகள் ஒவ்வொருவரும் நியமனமான காலத்திலிருந்தும் அதற்கடுத்த ஒவ்வொரு ஆண்டிலும், தனக்குச் சொந்தமான அசையா சொத்துக்கள் பற்றி சர்க்காருக்கு விவரம் தரவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட ஒரு நபருக்கோ, அல்லது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவருக்கோ மேற்படி சொத்துக்கள் யார் மூலமாக அளிக்கப்பட்டாலும் சரி அல்லது பூர்வீகமாக அடைந்ததாக இருந்தாலும் சரி அந்தச் சொத்துக்களைப் பற்றி சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டுமாம்.

எதனையே அந்தச் சொத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

# தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

## டாக்டர்கள் சாட்சியம்

திருநெல்வேலி, செப். 4—
தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை, செஷன்ஸ் நீதிபதி திரு கே. என். ராதாகிருஷ்ண முதலியாரால் தொடர்ந்து விசாரிக்கப்பட்டபோது மேலும் சில பிராஸிக்யூஷன் சாட்சிகள் சாட்சியமளித்தனர்.

67-வது சாட்சியாக டாக்டர் ரங்கசாமி பிள்ளை சாட்சியமளிக்கையில், கூறியதாவது:—

"நான் ஆண்டாள் தெருவில் வசித்திருக்கிறேன்; சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதியன்று காலையில் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காயமடைந்த சிலருக்கு அவசர சிகிச்சை செய்தேன்; என் வீட்டின் முன்பு ஒரு போலீஸ் லாரி நின்றுகொண்டிருந்தது; அதில் மூன்று பேர் இறந்துவிட்டனர்; ஒருவர் மிக ஆபத்தான நிலையில் இருந்தார்; அவர்கள் எல்லோரும் அநேகமாக துப்பாக்கிக் குண்டடிபட்டு காயப்பட்டிருந்தனர்; காயம்பட்டிருந்தவர்களில் சிலருக்கு அவசர சிகிச்சையளித்து, எல்லோரையும் உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்படி போலீசாரிடம் கூறினேன்; பிற்பகலில் சாட்சி சோமசுந்தரியம்மாளுக்கு, நான் சிகிச்சை செய்தேன்; புஜத்திலும், மணிக்கட்டிலும் இலேசான வீக்கம் கொண்ட காயங்கள் இருந்தன."

★

அடுத்தபடியாக டாக்டர் பி. எஸ். வெங்கட்டராமன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

'சென்ற வருடம் ஜூலைமாதம் 15-ந் தேதி, ராஜலட்சுமி அம்மாளுக்குச் சிகிச்சை செய்தேன்; அவர் கழுத்தின் பின்புறம் சிராய்ப்பு ஏற்பட்டு சிறு காயம் இருந்தது; கழுத்திலிருந்த சங்கிலியைப் பலமாகப் பிடித்திழுத்ததால், இக்காயம் ஏற்பட்டதென்று சொல்லப்பட்டது"

★

பின்னர் மாணிக்கம் என்ற இளைஞன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

'சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதி காலையில் கிரேட் காட்டன் ரோடிலிருந்த என் தாப்பணூர் மார்க்கடைக்குச் சென்றேன்; அன்று தி. மு. க. தொண்டர்கள் ரயில் நிறுத்தம் செய்வார்களென்று சுவர்களில் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன்; கடையிலிருந்து 8 மணிக்குப் புறப்பட்டு மேலூர் ஸ்டேஷனுக்கு வந்தேன்; அங்கு ஒரு ரயில் வண்டியின் முன்பு சுமார் 150 பேர் உட்கார்ந்திருந்தனர்; மேலும் சுமார் 2,000 பேர் கூடியிருந்தனர்; பின்னர், ஸ்ரீநிவாஸ் காப்பி ஹோட்டல் பக்கம் வரும்போது சுமார் 30 பேர் கொண்ட கூட்டம் புதுக்கிராமம் நோக்கிச் சென்றது; பெருமாள் கோவிலருகில் மற்றும் பலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்; புதுக்கிராமத்தில் இருந்த சில வீடுகளில் கூட்டத்தினர் நுழைந்து, படங்கள், கண்ணாடிகள் முதலிய சாமான்களை சேதப்படுத்தினர்; அதே தெருவில் உள்ள மஞ்சள் காவி பூசிய வீட்டிற்குள்ளும் சிலர் சென்றனர்; கொஞ்ச நேரத்தில் திரும்பி வெளியே வந்தனர்; கூட்டத்திலிருந்த ஒருவரின் மடியிலிருந்து மூக்குக் கண்ணாடி விழுந்துவிட்டதை நான் மட்டும் பார்த்து எடுத்துக்கொண்டேன்; அதை சில தினங்கள் கழித்து ஒரு டவுன் பேரு வியாபாரியிடம் விற்றுவிட்டேன்."

எதிரிகளை அடையாளம் காட்டச் சொன்னபோது சாட்சி கூறியதாவது:—

'அன்று கூட்டத்திலிருந்த எதிரிகள் எவரையும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது; அவர்கள் ஜாடையையும், பெயர்களையும் மறந்துபோய் விட்டேன்; கீழ்க் கோர்ட்டில் சாட்சியமளிக்கையில், 50, 40, 45-வது எதிரிகளை அடையாளம் காட்டியதாக எனக்கு நினைவில்லை; மேலும் 39, 42, 43, 46 முதலிய எதிரிகளை அடையாளம் காட்டியதாகவும் ஞாபகமில்லை; நான் எந்த எதிரிக்கும் சொந்தமில்லை; எதிரிகளுக்குச் சொந்தக்காரனுமல்லன்; கீழ்க் கோர்ட்டில் சொன்னதற்கு மாறாக சாட்சி சொல்லுவதாகக் கூறுவது தவறு."

★

திருநெல்வேலி, செப். 6—
இன்று, திரு எம். என். ராமசாமி சாஸ்திரி 74-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். சாட்சி கூறியதாவது:—

"நான், புதுக்கிராமத்தில் வசித்துவருகிறேன்; சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதி காலையில், சுமார் 15 பேர்கள் கொண்ட கோஷ்டியினர் தடிக் கம்புகளுடன், தெருவில் கோஷமிட்டுக் கொண்டு வந்தனர். வீடுகளின் மேல் கற்களையும் எறிந்தனர்; நான், வீட்டின் இருந்த டெலிபோன் மூலம் தெற்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு இதுபற்றி தகவல் அனுப்பினேன். ஸ்டேஷன் ரைட்டர், சில போலீசாரை அனுப்பி வைப்பதாகப் பதிலளித்தார்; சிறிது நேரம் சென்றபின் சுமார் 30 பேர் வீடுகளின்மேல் கற்களை எறிந்து கொண்டும், தடிக் கம்புகளால் கதவுகளை உடைத்துக் கொண்டும் தெரு வழியே வந்தனர்; என் வீட்டின் முகப்பில் இருந்த எலக்டிரிக் பல்பு முதலியவைகளையும் சேதப்படுத்தினர்; அவர்கள் சாமிகுளத்தய்யர் வீட்டிலும் நுழைந்து சேதமுண்டுபண்ணி பெண்களையும் இம்சித்ததாகக் கேள்விப்பட்டு, இந்தியன் பாங்கியில் வேலை செய்யும் அவரது மகனுக்கும் டெலிபோன் மூலம் தகவல் சொன்னேன்; பிறகு சாமிகுளத்தய்யர், என்னை டெலிபோனில் கூப்பிட்டுக் கேட்டதில், அவரிடம், வீட்டின் சாமான்கள் சேதப்படுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னேன்."

★

பின்னர், திரு. எம். என். கிருஷ்ணய்யங்கார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"நான், சென்ற வருடம் ஜூலை 15-ந் தேதி காலையில் கிரேட் காட்டன் தெருவிலுள்ள எனது கடைக்குச் சென்றேன்; சிறிது நேரத்தில் வீட்டிலிருந்து தகவல் வந்ததும் மறுபடியும் வீடு திரும்பினேன்; அங்கு கண்ணாடி, படங்கள், பல்புகள், டைப் ரைட்டர் முதலியவை சேதப்பட்டிருந்தன; என் மனைவி காலையில் நடந்தவைகளைப்பற்றிச் சொன்னாள்."

★

பின்னர் தெற்கு போலீஸ் ஸ்டேஷன் ரைட்டர் ஷண்முகம் பிள்ளை கூறியதாவது:—

"சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதியன்று காலையில், புதுக்கிராமம் 185-வது நெம்பர் டெலிபோன் மூலம் புதுக்கிராமத்தில் கூட்டமாகச் சிலர் வந்து வீடுகளின்மேல் கல்லெறிந்து தொந்தரவு கொடுத்தார்கள் என்று தகவல் கிடைத்ததும், மூன்று போலீசாரை அங்கு அனுப்பினேன்; பிறகு, போலீஸ் ஸ்டேஷனை சரிவரப் பாதுகாக்கும்படி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உத்தரவு வந்தது; ஸ்டேஷனில் நானும், மற்றொரு பாரா போலீசார் மட்டும் இருந்ததால், புதுக்கிராமத்திற்குப் போன மூன்று போலீசாரையும் திருப்பி கூப்பிட்டேன்."

★

திருநெல்வேலி, செப். 7—
தபால் தந்தி இலாகாவைச் சேர்ந்த நாகராஜய்யர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"நான், புதுக்கிராமத்தில் பெருமாள் கோவிலுக்கு வடக்கிலுள்ள வரிசையில் வசித்துவருகிறேன்; சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதியன்று நான் வீட்டிலிருக்கையில் சுமார் 15 பேர்கள் கூட்டமாய் தெருவில் கல்லெறிந்து கொண்டும், கோஷங்கள் செய்து கொண்டும் வந்ததைப் பார்த்தேன்; அன்று செவ்வாய்க்கிழமையாதலால், என் மனைவி நகைகளைக் கழற்றி ஒரு சிறு தகர டப்பாவில் போட்டு, அலமாரியில் வைத்துவிட்டு, என்னைப் ஸ்நானம் செய்தாள்; தெருவில் கூட்டத்தினர் அட்டகாசம் செய்ததால், என் மனைவியும், குழந்தைகளும் பயந்துவிட்டதால், அவர்களை எனது வீட்டிற்குக் கிழக்கே வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனேன்; அங்கு போகுமுன், வாசல்புற கதவுகளை மூடிவிட்டு, பின்பக்கம் வழியே சென்று மறுபடியும் வீட்டிற்குத் திரும்பும்போது என் வீட்டின் பின்புறக் கதவு வழியாக ஒரு கூட்டத்தினர் உள்ளே நுழைவதைப் பார்த்துப் பயந்து, மறுபடியும் கிழக்கே வீட்டிற்குச் சென்றுவிட்டேன்; என் வீட்டினுள் பாத்திரங்கள் உருளுவதையும், ஜாடிகள் உடையும் சத்தத்தையும் கேட்டேன்; பிறகு கூட்டத்தினர் சென்ற பின் என் வீட்டினுள் நுழைந்து பார்க்கையில் எண்ணாடிகள் சிதறிக் கிடந்தன; பாத்திரங்களும் சேதப்பட்டிருந்தன; நகைகள் வைக்கப்பட்டிருந்த தகர டப்பாவையும் காணவில்லை; பீரோவில் இரண்டு வடம் பாவக்காய் சங்கிலி, இரண்டு ஜோடி தங்க வளையல், மூக்குத்தி, ஒரு மூத்தாரம் ஆகியவை இருந்தன."

சாட்சி, கோர்ட்டில் தங்கச்சாமி, பொன்னுசாமி, கட்டிகட்டி பொன்னு, சித்ரவேல் ஆகிய எதிரிகளை அடையாளம் காட்டி, சம்பவ தினத்தன்று தம் வீட்டில் நுழைந்த கூட்டத்தில் அவர்களும் இருந்ததாகக் கூறினார்.

# சீனா சமாதானத்தையே விரும்புகிறது!

# அங்கீகரிப்பதால் அன்பு வளரும்!

## கம்யூனிஸ்டு சீனா பற்றி அட்லியின் கருத்து

"தற்போது அதிகாரத்தில் உள்ள சீன சர்க்கார், திறமையான சர்க்கார்; இதை ஆதரிக்கத்தான் வேண்டும்,"

என்று, பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவரான அட்லி, ஆஸ்திரேலியப் பாராளுமன்றக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சீன சர்க்காரை ஆஸ்திரேலியா அங்கீகரிக்கவில்லை என்பது தனக்குத் தெரியும் என்றும், சர்ச்சைக்கிடமான விஷயத்தில் தான் பிரவேசிப்பதாகவும் அட்லி மேலும் கூறினார்.

'சீனாவில் நான் அதிகமாக சுற்றுப் பயணம் செய்யவில்லை என்றாலும்கூட, அங்குள்ள பாமர மக்கள் சமாதானத்தையும், பாதுகாப்பையும் விரும்புகிறார்கள் என நான் நிச்சயமாகத் தெரிந்து கொண்டேன்; பீகிங் சர்க்கார், கம்யூனிஸ்டு இலட்சியங்களையும், தொழிலாளர்கள், குடியானவர்களின் ஆதரவையும் கொண்ட சர்க்காராகும்.

சீனாவில், சியாங்-கே-ஷேக்கின் ஆதரவாளர் ஒருவர் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்!

கம்யூனிசம், தேசீயம் என்ற இரண்டும் சீனாவில் நிலைக்கப்பட்டிருக்கிறது; இவ்விரண்டில், எதன் வலிமை ஓங்குமென்று முன்கூட்டியே கூற முடியாது.

சீனாவில் 60 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்பதையும், அழிவைத் தரும் மற்றொரு போரை உலகம் விரும்பவில்லை என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்:

எதிர்க் கட்சித் தலைவரான நானும், சர்ச்சிலும் கலந்து பேசுவோம்; அவரை என் வழிக்குத் திருப்பிவிடலாம் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல், சீனாவுடன் நமது உறவையும் விவேகமாக வகுத்துக்கொள்ள வேண்டும்.

சமாதானத்தையே கம்யூனிஸ்டு சீனா விரும்புகிறது என்பதை நான் உறுதியாகச்சொல்ல முடியும். அந்த நாட்டின் புதிய தலைவர்கள், நம்மைப் போன்ற கம்யூனிஸ்டுகள் அல்லாதவருடன் கலந்து பழகினால் நமது ஜனநாயகம், சட்ட அமைப்பு பற்றிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆசியாவில் இப்போது புதிய சக்தி ஒன்று வெளிப்பட்டு முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறது; இதைத் தடுக்க யாராலும் முடியாது. பிரிட்டனும், மற்ற ஐரோப்பிய நாடுகளும், எந்த நன்மைக்காக முனைந்து செல்கிறதோ, அது போன்ற பயன் ஒன்றைக் கருதியே அந்த சக்தி வளர்ந்து வருகிறது.



இந்த சக்தி, தனது வலிமையைக் காட்டியபோது, பர்மா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில், பிரிட்டனால் அதை எதிர்த்து நிற்க முடியவில்லை.

வாழ்வில் முன்னேற்றமும் அமைதியில் நம்பிக்கையும் விரும்பும் சக்திதான் அது!

சீனாவில் ஜனநாயகம் இருக்கிறதென்று நான் கூறமுடியாது. ஜனநாயகம், சட்டம் இவைபற்றி நாம் கொண்டிருக்கிற எண்ணங்கள், அவர்களிடையே இல்லை. சீனாவில், கம்யூனிசமென்பது ஒரு மதம் போன்றது; பொருளாதாரம், அரசியல் என்ற தத்துவங்கள் என்பதைவிட, கம்யூனிசம், அங்கே ஒரு மதம் என்று கருதப்படுகிறது.

இப்போது சீனாவில் இயங்குகிற சர்க்கார்; ஊழல் அற்ற சர்க்கார் ஆகும்

சீனாவின் விவசாயிகள் 90 சதவிகிதத்தினருக்கு சிறந்த வழிகாட்டிகள் இருக்கிறார்கள்."

# எகிப்து மந்திரி சபையில் நெருக்கடி

## சாலே சலீம் வெளியேற்றப்படுகிறார்

கெய்ரோ—
எகிப்து பாதுகாப்பு அமைச்சரான மேஜர் சலீமுக்கு எகிப்து சர்க்கார், காலவரையின்றி விடுமுறை அளித்திருக்கின்றனர்.

சமூக இலாகா அமைச்சர் உசேன் ஷாபி, சலீமின் பொறுப்புகளை ஏற்பார் என்று தெரிகிறது.

சென்ற திங்களிலேயே சலீம் தனது இராஜிநாமாவை சமர்ப்பித்தார் என்றும், பிரதம மந்திரி நாசர் சமாதானம் செய்து வைத்து நிலைமையைச் சமாளித்தார் என்றும் தெரிகிறது.

எகிப்து மந்திரி சபையில் கருத்து [illegible] தாக [illegible] கொண் [illegible] கப்பட்டு வெளியேற்றப்படுகிறார் என்றும் தெரிகிறது.

'அமைதிக்காக அடிப்படையான சுதந்திரத்தை விட்டுக் கொடுப்பவர்கள், சுதந்திரம் பெறவும் உரிமையற்றவர்கள்; பத்திரமாய் வாழவும் உரிமையற்றவர்கள்.'

—பெஞ்சமின் பிராங்கிளின்

# இந்தியாவிற்கு ரயில் வண்டிகள்

## அமெரிக்கா—ஜப்பானில் தயாரிக்கப்படுகிறது

வாஷிங்டன், செப். 7—
கடந்த டிசம்பர் மாதத்தில் இந்தியாவுடன் செய்துகொண்ட பொருளாதார உதவித் திட்டப்படி, அமெரிக்கா, இந்தியாவிற்கு 100 ரயில் என்ஜின்களையும், 5,000 கூட்ஸ் வாகன்களையும் இன்னும் ஓராண்டில் அனுப்பும்.

அமெரிக்க உற்பத்தியாளரிடமிருந்து மட்டுமல்லாமல் ஜப்பானிய உற்பத்தியாளரிடமிருந்தும் இவைகளை வாங்கத் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது. ரயில் என்ஜின்களில் பாதி அமெரிக்க உற்பத்தியாளரிடமிருந்தும், மற்றவை ஜப்பானிய உற்பத்தியாளரிடமிருந்தும் வாங்கப்படுமென்றும், 5,000 கூட்ஸ் வாகன்களை அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த உற்பத்தியாளரிடமிருந்து வாங்கப் போவதாகவும் தெரிகிறது.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டம் காரணமாக அந்நாட்டின் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது என்றும், எனவே, போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி படைவதற்காக இந்த உதவி தேவை என்றும் குறிப்பிடப்படுகிறது.

# பாங்கி ஊழியர்கள் பிரச்சினை

## வி. வி. கிரி கருத்து

சென்னை, செப். 11—

"பாங்கி ஊழியர்கள் சம்பளப் பிரச்சினைக்கு நல்லதொரு முடிவு காண, சர்க்கார், பாங்கி சங்கங்கள், பாங்கி ஊழியர் சங்கங்கள் ஆகியவைகளுக்கிடையே ஒரு முக்கூட்டு மாநாடு நடத்த வேண்டும்," என்று தொழிலாளர் மந்திரி பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு வந்துள்ள திரு வி. வி. கிரி தெரிவித்தார்.

இத்தகைய ஒரு மாநாட்டினால், பிரச்சினை தீர சமரசமான, விரைவான வழிகள் கிடைக்குமென்றும், கடந்த ஏழாண்டுகளாக பாங்கித் தொழிலாளர்கள் காத்திருக்கும், 3 'டிரிபியூனல்'கள் தீர்ப்பளித்தும், அவர்களுக்கு எந்தவிதப் பலனும் இல்லாதுபோயிருக்கிற ஒரு பிரச்சினையை, உடனே சர்க்கார் கவனிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சர்க்காரைக் கவிழ்க்கச் சதி

## ஈரானில் இராணுவச் சிப்பந்திகள் கைது

டெஹ்ரான், செப். 12—

பர்சியப் பாதுகாப்பு இலாகாவினர் பர்சியா முழுவதிலுமுள்ள போலீஸ், இராணுவ சிப்பந்திகளில் 500 பேரைக் கைது செய்தனர் என்று தெரிகிறது.

ஆகஸ்டு 16-ந் தேதியிலிருந்து இப்படிக் கைது செய்யப்படுவது நடைபெறுகிறதாம். இவர்கள் அனைவரும் டெஹ்ரான் சர்க்காரைக் கவிழ்க்கும கம்யூனிஸ்டு சதி ஒன்றில் ஈடுபட்டிருந்தார்கள் என்று கூறப்படுகிறது.

பர்சியாவின் அரசியல் கட்சியான டூடே கட்சியினர் மறைவிடத்தில் இருக்கிறார்களாம். ஏராளமான சிவிலியன்களையும் போலீசார் இச் சதி பற்றி ரிமாண்டில் வைத்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

# புயல் வருகிறது!

## ஜப்பானில் எச்சரிக்கை

டோக்கியோ, செப் 12—

ஜப்பான் மக்கள் கவலையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கொடிய புயல் தோன்றுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பே மலையொத்த பெரும் அலைகள் ஜப்பானியக் கடற்கரையில் மோத ஆரம்பித்தனவாம்.

1934-ம் ஆண்டில் இங்கு ஏற்பட்ட குமுறல் காரணமாக 2,700 பேர் உயிரிழந்தனராம்.

அதற்குப்பின் இப்போதுதான் அத்தகைய ஒரு கொடும் புயல் ஏற்படுகிறதாம்.

போலீசாரும் தீயணைக்கும் படையினரும், நிவாரணக் குழுவினரும் எத்தகைய நிலைமையும் சமாளிக்கத் தயாராக இருக்கின்றனர்.

புயல் இப்போது ஜப்பானின் தென் மேற்குத் திசையிலிருந்து 10 கமைல் வேகத்தில் வந்து கொண்டிருப்பதாகவும் இந்த வேகத்தில் அது வருமானால் நாளை மத்தியானம் அது கியூஷூ தீவை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரயாணம் செய்துகொண்டிருந்த கப்பல்கள் யாவும் கரைக்கு வந்துவிடுமாறு எச்சரிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

# இருதயநோய் நிபுணர்கள் மாநாடு

வாஷிங்டன், செப். 10—

இந்தியா, எகிப்து, ஈராக், இஸ்ரேல், துருக்கி, பாகிஸ்தான் முதலிய 40 நாடுகளைச் சேர்ந்த டாக்டர்களும், ஆராய்ச்சியாளர்களும் 12-ந் தேதி இங்கு ஆரம்பிக்கும் [illegible] உலக [illegible]

# பெரியார் படத் திறப்பு!

## பொதுச் செயலாளரை அழைக்க முடிவு

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தைச் சேர்ந்த குரும்பேரி ஊராண்மைக் கழகம், 2—9—54-ந் தேதியன்று நடத்திய கூட்டத்தின்போது, நடந்த ஜனவரியில் அந்த ஊராண்மைக் கழகம் நிறைவேற்றிய தீர்மானப்படி, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களை அழைத்து பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் படத்தைத் திறந்து வைப்பது என்றும், உடன் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொள்ளக் கேட்டுக் கொண்டும் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது.

# வானிலை சீர்குலைவு

## அணுகுண்டு பரிசோதனை காரணமா?

சென்னை, செப். 11—

அணுகுண்டு, நீர்வாயுக்குண்டு போன்றவை வெடிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டதின் விளைவாகத்தான், இவ்வருட வேனிற் காலத்தின்போது படுமோசமான பருவநிலைகள் ஏற்பட்டனவா என்று விசாரணை நடத்தும்படி சர்வதேச வானிலை ஆராய்ச்சி சங்கத்தின் டைரக்டர்-ஜெனரல் டாக்டர் ஸ்வோபோதா கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

15 நாடுகளின் நிர்வாகக் குழு அங்கத்தினர்களின் இரகசியக் கூட்டம் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

உலக மக்களின் கவலையை உத்தேசித்தே மேற்படி விசாரணை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது என்றும் தெரியவருகிறது.

# அதிகாரிகளின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், ஒத்தி, அடமானம் இவைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தால், அவை இந்த விதிக்கு உட்படும் எனத் தெரிகிறது.

இந்த விதி இப்போது பரிசீலித்து வெளியான 1954-ம் ஆண்டு அகில இந்திய சர்க்கார் சிப்பந்திகள் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தின்படி, எந்த ஒரு சர்க்கார் ஊழியரும் தத்தமது அசையா சொத்துக்களை சர்க்காருக்குத் தெரியாமல் வாங்கவோ விற்கவோ முடியாது.

மேலும் 1000 ரூபாய்க்கு அதிகமான மதிப்புடைய அசையா சொத்து கொடுக்கல் வாங்கல் போதில் ஈடுபடும் ஒவ்வொரு சர்க்கார் சிப்பந்தியும் கட்டாயமாக முன்கூட்டியே சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஒரு சர்க்கார் ஊழியருக்குள்ள அல்லது அவருடைய குடும்பத்தினருக்குள்ள ஏதாவது, அசையா சொத்துக்கள் கைப்படக் கிடைத்தன என்று எந்த நேரத்திலும் கேட்க சர்க்காருக்கு உரிமை உண்டு என்றும் தெரிகிறது.

# தி.மு.க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை

## சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

★

### மரக்காணம்

15—9—54 காலை 9 மணிக்கு மரக்காணத்தில் தோழர் என். இமயவரம்பன்—தோழியர் திலகவதி திருமணம், பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

★

### திருவண்ணாமலை

16—9—54 காலை 8 மணிக்கு திருவண்ணாமலை, சாதுக்கள் சத்திரத்தில, தோழர் சே. குப்புசாமி—தோழியர் ஆண்டாள் திருமணம், பொதுச்செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

★

### மேல்சீசமங்கலம்

16—9—54 மாலை 3 மணிக்கு ஆரணியையடுத்த மேல்ச்சமங்கலம் அண்ணா தெருவில் அமைந்திருக்கும் ஆசிரியர் வேலாயுதம் அரங்கில் தோழர் மு. நடேசன்—தோழியர் மோகனு திருமணம், பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

★

### சேத்துப்பட்டு

(வ. ஆ. மாவட்டம்)

தி.மு.க. பொதுக்கூட்டம்

பஜார் குட்டை மைதானத்தில் 16—9—54 மாலை 6½ மணிக்கு

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்
ப. உ. சண்முகம்

★

### செம்பியம்

தி.மு.க. பொதுக்கூட்டம்

18—9—54 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

சி. என். அண்ணாதுரை

★

### சென்னை

இராயபுரம்

தி.மு.க. பொதுக்கூட்டம்

19—9—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்

குறிப்பு:—இந்நிகழ்ச்சிகட்குப் பிறகு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் உடல் நலம் கருதி டாக்டர்கள் கூறிய ஆலோசனைப்படி வெளியூர் அழைப்புகட்கும், பொதுக்கூட்டம் சொற்பொழிவுகட்கும் அக்டோபர் மாதம் இறுதி வரை கலந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கிறார் என்பதை நம் தோழர்கள் அறியவும்.

# வருமான வரி

## ரூ. 170 கோடி பாக்கி

இவ்வருடம் மார்ச் 31 முடிய வருமான வரி, சூப்பர் வரி மூலமாக சுமார் 169 6 கோடி ரூபாய் வசூல் செய்யப்படாமலிருப்பதாக மக்கள் சபையில் உதவி நிதி மந்திரி மந்திரி எம். சி. ஷா கூறினார்.

1953—54-ல் ரூ 10 லட்சம் வசூல் செய்ய முடியாமல் விடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# இறக்குமதி வரி அதிகரிப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள், சோப்பு, மரச் சாமான்கள், பேனா, நிப்புகள், உடுப்புகள், பின்கள் துணிகள், பூட்சு, செருப்புகள், மின்சார பல்புகள், கண்ணாடி மணிகள், செயற்கை முத்துக்கள், குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்கள், கிரிக்கெட், ஹாக்கி போன்ற விளையாட்டுக்கான உபகரணங்கள் முதலியவற்றிற்கு இறக்குமதி வரி விதிப்பு பல விகிதங்களாக, ஏற்கனவே இருந்ததைக் காட்டிலும் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கின்றன.

இறக்குமதி வரி உயர்வின் மூலம், இந்திய சர்க்காருக்கு ரூ. 4½-கோடி வருமானம் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

இதுபற்றி மக்கள் சபையில் பேசிய நிதி அமைச்சர், வரவு-செலவுத்திட்டத்தின்படி இந்த ஆண்டில் ரூ 1775 கோடி [illegible] வருமானம் எதிர்பார்க்கப்பட்டதாகவும், ஆனால் முதல் ஐந்து மாதங்களில் ரூ. 60 கோடிதான் கிடைத்திருக்கிறது என்றும் கூறினர்.

இந்த வருமானக் குறைவை ஈடுகட்டவே இறக்குமதி வரி உயர்த்தப்படுகிறதாம்!

# இராஜ்யங்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னிடமே அந்த அதிகாரங்களை நிரந்தரமாக வைத்துக் கொள்ள விரும்புகிறது.

தற்போதுள்ள அரசியல் சட்டப்படி அதன் 249-வது பிரிவு, பொருள்களின் மீது கட்டுப்பாட்டை விதிக்க டில்லி சர்க்காருக்குத் தற்காலிகமாக அதிகாரம் தருகிறது. இப்பிரிவை—அடிக்கடிப் பயன்படுத்த அவர்கள் விரும்பாது நிரந்தரமான அதிகாரம் வேண்டுமென்றே மூன்றாவது அரசியல் சட்டதிருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதனை மக்கள் சபையில் பலர் கண்டித்துள்ளனர்.

"இதன் மூலம் அரசியல் சட்டத்தின் அமைப்பே மாற்றப்படுகிறது; இராஜ்யங்களுக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே உள்ள அதிகார வரம்பு மாற்றப்படுகிறது," என்று கூறி, வலிமை மிக்க மத்திய சர்க்கார் அமைக்க விரும்பும் காங்கிரசாரின் போக்கை அசோக் மேத்தா கண்டித்திருக்கிறார்.

"ராஜ்யங்களின் அதிகாரத்தைத் தவறான முறையில் பிடுங்குவதற்கு செய்யப்படும் முயற்சி இது," என்று பம்பாயைச் சேர்ந்த என். எஸ். மூர் கண்டித்தார்.

"ராஜ்யங்கள் இப்பொருள்களின் மீது திறமையான முறையில் தனது அதிகாரத்தைச் செலுத்தவில்லை என்றால் தான், இது போன்ற அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்," என்று பண்டிட் தாகூர் தாஸ் பார்கவா கூறியிருக்கிறார்.

"மத்திய சர்க்கார் இராஜ்யங்களின் அதிகாரத்தை அபகரிக்க முயற்சிக்கிறது," என்று கே. எம். வல்லத்தரசு கூறி இந்த மசோதாவை எதிர்த்தார்.

"இம்மசோதா அனுவசியமானது; ராஜ்யங்களுக்குள்ள அதிகாரங்களில் இது தலையிடுவதாகும்; ராஜ்ய சட்ட சபைகளுக்கு பிரத்தியேகமாகவுள்ள அதிகாரத்தை, எதற்காக நிரந்தரமாக பறிக்க சட்டம் செய்ய வேண்டுமென்பது தெரியவில்லை," என்று மே. வங்கத்தைச் சேர்ந்த சாதன் குப்தா எடுத்துக்காட்டி, மசோதாவை எதிர்த்தார்.

இராஜ்யங்களின் அதிகாரத்தை அபகரிக்கும் இந்த மசோதாவிற்கு இராஜ்ய சட்டசபைகளின் ஒப்புதல் தேவையிருக்கிறது.

விவாதத்திற்குப் பதில் அளித்த அமைச்சர் இந்த மசோதாவின் கருத்துக்களை ஹைதராபாத், மைசூர், ஒரிசா, ராஜஸ்தான், சௌராஷ்டிரா, திருவாங்கூர்—கொச்சி, மேற்கு வங்கம் ஆகிய இராஜ்யங்கள் பொதுவாக ஒப்புக்கொண்டிருக்கின்றன என்றும், பம்பாய் இதை ஓரளவாக எதிர்த்திருக்கிறது என்றும், பீகார் நிரந்தரமாக அதிகாரத்தை விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை என்றும், ஆந்திரா, மத்திய பாரத், சென்னை ஆகியவைகள் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறதென்றும், மற்ற இராஜ்யங்கள் கருத்து எதுவும் கூற விரும்பவில்லை என்றும் கூறினர்.

விவாதத்தின் மீது ஓட்டெடுக்க வேண்டுமென்றால் சபையில் மூன்றில் இரண்டு பங்கினர் இருக்க வேண்டும். விவாதம் முடிவுற்றபோது சுமார் 200 உறுப்பினர்கள் தான் இருந்தார்களாம்; ஆகவே, காங்கிரசார், மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தலாம் என்று சபையை ஒத்திவைக்கக் கோரினார்கள்.

6 மணிக்கு, திட்ட அமைச்சர் தனது பேச்சை முடிக்காததால், வாக்கெடுப்பை, சபைக்குத் தலைமைவகித்தவர் திங்கட்கிழமை ஒத்திவைத்தார்.

இம்போக்கினை எதிர்த்த எதிர்க்கட்சிக்காரர்கள், 'வெட்கம், வெட்கம்,' என்று கோஷமிட்டனராம்!

இதற்கிடையில், டில்லியை விட்டு வெளியே சென்றிருக்கிற அங்கத்தினர்களை உடனே திங்கட்கிழமைக்குள் டில்லிக்கு வருமாறு காங்கிரஸ் சட்டசபைக் கட்சி தந்தி கொடுத்திருக்கிறதாம்!

# சூயஸ் - ஒப்பந்தம்

இம்மாதம் கையெழுத்தாகும்

சூயஸ் மண்டலம் பற்றிய பிரிட்டிஷ்—எகிப்திய ஒப்பந்தம் செப். 20-25-ம் தேதிக்குள் கையெழுத்தாகுமென்று பிரிட்டிஷ் வட்டாரங்கள் நம்புகின்றன.

# மறைவு

திருக்கோட்டியூர் தோழர் எஸ். வி. மதியண்ணன் அவர்களது தம்பியார் தோழர் நாகலிங்கம் 9-9-54ல், [illegible]. நமது அனுதாபம் உரித்தாகுக.—மொ. அப்பளார்.

[illegible]
ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.